தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஐப்பசி 9, சித்ரபானு—திருவள்ளுவர் ஆண்டு 2033

2002 அக்டோபர் 25, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி"

நலவாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலை உணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்தியும் மக்களைப் பேணிக் காப்பதே ஓர் அரசுக்குப் புகழொளி சேர்ப்பதாகும்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா எண் 1, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.*

1—

திட்ட மதிப்பீடு

***5781—திரு. கா.பூ. முனுசாமி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி அணையின் வலதுபுறக் கால்வாய் உபரி நீரை பொம்மசமுத்திரம் வழியாக திண்டல் ஏரி வரை கொண்டு செல்லும் திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(ஆ) இத்திட்டம் இந்த ஆண்டே நிறைவேற்றப்படுமா?

[2002 அக்டோபர் 25

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி அணையின் வலதுபுறக் கால்வாய் உபரி நீரை பொம்மசமுத்திரம் வழியாக திண்டல் ஏரி வரை கொண்டு செல்லும் திட்டம், திட்ட உருவாக்கம் தலைமைப் பொறியாளரின் விரிவான ஆய்வில் உள்ளது.

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியில் கிருஷ்ணகிரி அணையின் இரண்டு புறமும் வலதுபுறம் மற்றும் இடதுபுறமாக கிட்டத்தட்ட 30 கிலோ மீட்டர் நீளம் தண்ணீர் பாய்கின்றது. இந்த அணையில் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக உபரி நீராக சுமார் 1556 மில்லியன் கன அடி தண்ணீர் வீணாக வெளியேறுகிறது, இந்தத் தண்ணீரைச் சேமிக்கின்ற வகையில் இப்போது ஏரி வலதுபுறக் கால்வாயின் வாயிலாக பொம்மசமுத்திரம் வழியாக காரிமங்கலம், திண்டல் மற்றும் 39 ஏரிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்யக்கூடிய வகையிலே இந்தத் திட்டம் இந்த ஆண்டு நிறைவேற்றப்படுமா? அப்படி நிறைவேற்றப்படுகின்ற நிலையில் சுமார் 1,212 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். அதேபோல இடதுபுறக் கால்வாயும் கிட்டத்தட்ட வீரமலை ஏரி வரை பாய்கின்றபோது 1,020 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். எனவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் இந்த நிதி ஆண்டிலேயே இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பாலக்கோடு மற்றும் கிருஷ்ணகிரி வட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தின் கால்வாய்களைச் சீரமைத்து, வலதுபுறக் கால்வாயை நீட்டித்து, புதியதாக 1,212 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதியை உருவாக்கி, மேலும் பொம்மசமுத்திரம் ஏரி, காரிமங்கலம் ஏரி, திண்டல் ஏரி மற்றும் 31 பிற ஏரிகளுக்கு நீர் வழங்குவதற்கான திட்ட முதல்நிலை அறிக்கை ரூ.1,715 இலட்சங்களுக்குத் தயாரிக்கப்பட்டது. இத்திட்ட மதிப்பீட்டினை விரிவாக ஆய்வு செய்து, விரிவான மதிப்பீடு அனுப்பிவைக்குமாறு தல அதிகாரிகள், திட்ட உருவாக்கம் தலைமைப் பொறியாளரால் கோரப்பட்டுள்ளனர். இத்திட்டத்தினால் ஏற்கெனவே உள்ள 710 ஏக்கர் நஞ்சை நிலமும், இடைவழி 383 ஏக்கரும், 1,212 ஏக்கர் புதிய நிலங்களும் கூடுதலாகப்

2002 அக்டோபர் 25]

பாசன வசதி பெற வாய்ப்புள்ளது. தற்போது, இத்திட்டம், திட்ட உருவாக்கம் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது. அதற்குப் பின் மாவட்ட ஆட்சித் தலைவர், நில நிர்வாக ஆணையர் ஒத்திசைவு பெறப்பட வேண்டும். அரசின் நிதிநிலைக்கேற்ப இப்பணி எடுத்துச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் தமிழகத்தினுடைய ஜீவாதார உரிமையான காவிரி நதிநீர் உரிமையைத் தன்னந்தனியாக நின்று போராடி, உச்ச நீதிமன்றத்தின் வாயிலாக இன்று தமிழகத்திற்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) உபரி நீராகச் செல்லக்கூடிய கிட்டத்தட்ட 1,556 மில்லியன் கன அடி தண்ணீரை, 4 விழுக்காடுகள் தண்ணீரை மழைக்காலங்களில் சேமித்து, இந்தக் கால்வாய் வழியாக விட்டால் சுமார் 16 பஞ்சாயத்துகளில் உள்ள குக்கிராமங்களில் நிலத்தடி நீர் மேம்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. விவசாயத்திற்குப் பயன்படுவதோடு மட்டுமல்லாமல், கிட்டத்தட்ட 40, 50 கிராமங்களுக்கு குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கக்கூடிய, இரண்டு நிலை இலாபம் இதிலே கிடைத்திருக்கிறது. எனவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நிதியை இந்த ஆண்டே ஒதுக்கி, புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் அந்தப் பகுதி மக்களுக்கு வாழ்வளிக்க முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—05

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தினுடைய பயன்களை மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவின் அரசு தீவிரமாகப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி அணையினுடைய வலதுபுறக் கால்வாய் நீட்டிப்புப் பணிக்கு வாய்ப்பளிக்கின்ற வகையிலே நமது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் பாராட்டைத் தெரிவித்து, வரவேற்கக்கூடிய அதே நேரத்தில் அதையொட்டி இருக்கக்கூடிய பஞ்சபள்ளி அணையினுடைய வாய்க்காலை நீட்டிப்பதாகச் சொல்லி ... (குறுக்கீடு) அதையொட்டிதான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒட்டியெல்லாம் போகக்கூடாது. பதில் இருக்காது. அமைச்சரிடம் பதில் இருக்காது. தனியாகக் கேள்வி போட்டால்தான் பதில் இருக்கும்.

வினா எண் 2, திரு. ப. சிதம்பரம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

2—

திட்ட மதிப்பீடு

***7419—திரு. ப. சிதம்பரம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதியில் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு புதியதாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்த விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போதுள்ள நிதி நிலையின் காரணமாக புதிய அரசுக் கலைக் கல்லூரிகளைத் தொடங்குவது இல்லை என அரசு கொள்கை முடிவெடுத்துள்ளது. எனவே, பவானிசாகர் தொகுதியில் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு புதிதாகக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

திரு. ப. சிதம்பரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பவானிசாகர் தொகுதி என்பது பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதியாகும். மேலும் உயர்மட்டக் கல்வி பெற வேண்டுமெனில்; தொலைவில் உள்ள கோபிசெட்டிப்பாளையத்திற்கு சுமார் 50 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. பல ஆண்டுகாலமாக எனது தொகுதி மக்கள் கல்லூரி வேண்டுமென போராடி வருகிறார்கள். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் மறுபரிசிலனை செய்து